1981 ஏப்ரல் 22]

அளவிற்கு, போதிய தண்ணீர் வரத்து இல்லை எனத்தெரிந்ததால் இத்திட்டம் கைவிடப்பட்டது என்றும், இது தவிர ரூபாய் 5.30 லட்சத்தில் கல்லர் ஓடையின் குறுக்கே முத்துக்குமாரபுரம் அருகில் ஒரு அணை கட்டவும், விளாத்திக்குளம் வட்டத்தில் உள்ள குளத்தூர் தெற்கு கண்மாய்க்குச் செல்லும் கால்வாயை சீர் செய்யவும் ஒரு திட்டம் போடப்பட்டு ஆய்வில் உள்ளது என்றும் சிறு பாசனத் தலைமைப் பொறியாளர் தெரிவித்துள்ளார்.

குமரி மாவட்டம் பன்றி வாய்க்காலில் செல்லும் நீரை மேலேற்றிப் பாசனத்திற்குப் பயன்படுத்துதல்.

வினா எண் 845—திரு. குமரி அனந்தன்: மாண்புமிகு நீர்ப் பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) குமரி மாவட்டத்தில் பன்றி வாய்க்கால் ஓடையில் வீணாக கடலில் சென்று கலக்கும் தண்ணீரை மேலேற்றி (Lift Irrigation) பாசனத்திற்கு பயன்படுத்தும் திட்டம் செயல்படாமல் இருப்பதின் காரணம் என்ன?

(ஆ) விரைவில் செயல்படுத்த அரசு உத்தேசித்துள்ளதா?

விடை—

(அ) மற்றும் (ஆ) கன்னியாகுமரி மாவட்டத்தில் பன்றி வாய்க்காலில் செல்லும் நீரை மேலேற்றி (Lift Irrigation) பாசனத்திற்கு பயன்படுத்துவதற்கான திட்டத்தின் முதல் நிலை ஆய்வு மேற்கொள்ளப்பட்டு, திட்டத்தை விரிவாக ஆராய்ந்ததில் பொருளாதார ரீதியாக இது ஒரு ஆதாயமற்ற திட்டம் (Uneconomical) என்று தெரிய வந்ததால், இத்திட்டத்திற்கான மேல் நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்படவில்லை என சிறுபாசனத் தலைமைப் பொறியாளர் தெரிவித்துள்ளார்.

பெரும்பள்ளம் ஆற்றின் குறுக்கே அணைக்கட்டும் திட்டம்.

*வினா எண் 846—திரு. கு. அ. செங்கோட்டையன்: மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா?—

(அ) கோபி வட்டம் கெம்மநாய்க்கன் பாளையம் பெரும்பள்ளம் ஆற்றின் குறுக்கே அணைக்கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?